சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 30.01.2026 SC.65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பின்னத்தேவர் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | அய்யாவு | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW10 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் கூடலூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை. அதேபோல் அத்தாட்சியில் உள்ளது என் கையொப்பம் இல்லை. விஜய ராகவன் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் தெரியாது என கூறிவிட்டேன்.

**<u>சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.</u>**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கடந்த 02.03.2022ம் தேதி சாயங்காலம் 5.30 மணி போல நானும் எங்கள் தெருவில் வசிக்கும் கணேசன் மகன் விஜயராகவன் என்பவரும் எங்கள் ஊர் அண்ணாநகர் to ஆங்கூர் பாளையம் ரோடு முத்தையன் தென்னந்தோப்பு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த கூடலூர் இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ் பார்டியினர் அந்த வழியாக வந்து 01.03.2022ம் தேதி இரவு 8.30 மணி போல எங்கள் தெருவில் உள்ள ராஜாவின் வீட்டில் வைத்து ராஜாவையும், அவரது மகன் அரவிந்தயும், அருவாளால் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்திய எங்கள் தெருவில் வசிக்கும் சிவாஜி மகன் ஸ்டாலினை கைது செய்தும் எங்கள் இருவர் முன்னிலையில் ஸ்டாலினை விசாரித்தபோது அவர் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். ஸ்டாலின் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி கூடலூர்

இன்ஸ்பெக்டர் என்னையும் ஸ்டாலினையும் அழைத்து கொண்டு எங்கள் இருவரையும், அழைத்து சென்று நாங்கள் இருவரும் இன்ஸ்பெக்டருடன் வந்து காயம்பட்ட ராஜாவையும் அரவிந்தையும், வெட்ட பயன்படுத்திய வீச்சரிவாளையும் எங்கள் தெருவிலுள்ள பேச்சியம்மாள் என்பவரது மாடிப்படிக்கு அடியில் போட்டுள்ளதை ஸ்டாலின் அடையாளம் காண்பித்து எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் விஜயராகவனும் கையொப்பம் போட்டுவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டோம் என்றால் சரியல்ல.

(ஒம்.) M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்